Registered as a newspaper in Ceylon.

# தொண்டன்

கத்தோலிக்க மாத ஏடு.

| மலர் 4 | மட்டக்களப்பு | வைகாசி – 1972 | விலை 30 | இதழ் 5 |
|---|---|---|---|---|

## இங்கினியாகலையில்

# பாத்திமா அன்னையின் வெள்ளி விழா

வைகாசித் திங்கள் 13ம் திகதி எமது மேற்றிராசனத்தின் இங்கினியாகலையில் உள்ள பாத்திமா அன்னையின் சேத்திரத்தில் ஒரு மிக முக்கிய நிகழ்ச்சி நடைபெற இருக்கின்றது. அதாவது, 1964ம் ஆண்டு வைகாசி 13ம் திகதி பரி. தந்தை. 12ம் பத்தி நாதர் அன்னை மரியாளை உலகின் அரசி எனப் பிரகடனப் படுத்தி முடி சூட்டியதின் வெள்ளிவிழாக் கொண்டாட்டம் நடைபெறவிருக்கின்றது.

சென்ற வருடம் வைகாசி 13ம் திகதி பாத்திமா நகரிலே ஆரம்பித்து வைக்கப்பட்ட இவ்வெள்ளி விழாக் கொண்டாட்டம், உலகின் பல பாகங்களிலும் கொண்டாடப்பட்டுக்கொண்டே வந்துள்ளது. இக் கொண்டாட்டங்களிலே மரியாயின் மாசற்ற இருதயத்துக்கு நாடுகளையும், மேற்றிராசனங்களையும், பங்குகளையும், துறவற சமுகங்களையும், அப்போஸ்தலிக்க சபைகளையும், குடும்பங்களையும் காணிக்கையாக அர்ப்பணம் செய்தல் ஒரு முக்கிய அம்சமாக அமைந்துள்ளது.

## வைகாசி 13ந் திகதி.

### துணை ஆயரின் திருமுகம்.

இங்கினியாகலையிலே உள்ள பாத்திமா அன்னையின் சேத்திரத்திலே இவ்வெள்ளி விழாக் கொண்டாட்டத்தின் முடிவு நிகழ்ச்சியினை நம் நாட்டின் சார்பிலே வைக்கும் பாக்கியம் எமக்குக் கிடைத்துள்ளது. இத் தருணத்திலே இலங்கையின் பல ஆயர்களும், குருக்களும், கன்னியர்களும், இலங்கையின் எல்லா மேற்றிராசனங்களிலும் இருந்து ஏராளமான கிறிஸ்தவ மக்களும் எதிர்பார்க்கப் படுகின்றனர்.

இக்கொண்டாட்ட வேளையில் நமது சேத்திரத்துக்கென பாத்திமா அன்னையின் அனைத்துலக தொண்டர் சபையினுல் அளிக்கப்பட்ட தேவமாதாவின் சொரூபம் ஒன்று முடி சூட்டப்பட்டு, நமது ஈழநாடு முழுவதும் மரியன்

[16ம் பக்கம் பார்க்கவும்]

"திருச்சட்டத்தை அழிக்கவல்ல... நிறைவேற்றவே வந்தேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இறைவழிபாட்டுச் சிந்தனைகள்

## (துணை ஆயர்)

### (33) உறுதிப்பூசுதலுக்குரிய ஞானப் பெற்றோரின் கடமைகளும் தகைமைகளும்.

ஞானஸ்நானம் பெறும் பிள்ளைகளுக்கு ஞானப்பெற்றோரை நியமிப்பதுபோல, உறுதிப்பூசுதல் பெறும் பிள்ளைகளுக்கும் ஞானப் பெற்றோரை நியமிப்பது வழக்கம். ஞானஸ்நானத்தின் ஞானப்பெற்றோரே உறுதிப் பூசுதலுக்கும் ஞானப்பெற்றோராக நியமிக்கப்படுதல் மிகவும் விரும்பத்தக்கது. ஏனெனில், இதனால் ஞானஸ்நானத்திற்கும் உறுதிப்பூசுதலுக்குமுள்ள நெருங்கிய தொடர்பு தெளிவாகக் காட்டப்படுவதுடன், ஞானப் பெற்றோர் தங்கள் கடமைகளைச் சரிவர நிறைவேற்றுதலும் இலகுவாக்கப்படுகின்றது. ஆனால், உறுதிப்பூசுதலுக்குப் புது ஞானப் பெற்றோரை நியமிக்க விரும்புவோர் அப்படியும் செய்யலாம்.

உறுதிப்பூசுதல் பெறும் பிள்ளைகளுக்கு நியமிக்கப்படும் ஞானப்பெற்றோர் பின்வரும் சிறப்பான கடமைகளை நிறைவேற்ற வேண்டும்:

(அ) உறுதிப்பூசுதல்பெற அவர்களை அழைத்துச்சென்று, உறுதிப்பூசுதல் அளிப்பவர் முன் நிறுத்தவேண்டும்.

(ஆ) தங்கள் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதற்கு அடையாளமாக இரு ஞானப் பெற்றோருள் ஒருவர் உறுதிப்பூசுதல் திருச்சடங்கின்போது உறுதிப்பூசுதல் பெறுபவரின் வலது தோளில் தனது வலது கையை வைக்கவேண்டும்.

(இ) உறுதிப்பூசுதல் பெற்றவர்கள் பரிசுத்த ஆவியின் துணைகொண்டு ஞானஸ்நான வாக்குறுதிகளைப் பிரமாணிக்கமாய் நிறைவேற்றவும், திருச்சபையின் அப்போஸ்தல பணியில் சொல்லாலும் செயலாலும் பங்குகொள்ளவும் உதவியளித்து அவர்களை வழிநடத்த வேண்டும்.

உறுதிப்பூசுதல் பெறும் பிள்ளைகள் அல்லது அவர்களது பெற்றோர் தெரிந்துகொள்ளும் ஞானப்பெற்றோர் தாங்கள் ஏற்றுக் கொள்ளும் பெரும் பொறுப்பைச் சரிவர நிறைவேற்றக் கூடியவர்களாய் இருத்தல் வேண்டும். ஆகையால், அவர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்கவேண்டும்:

(அ) அவர்கள் ஞானஸ்நானம், உறுதிப்பூசுதல், தேவநற்கருணை என்னும் திருவருட்சாதனங்களைப் பெற்றவர்களாயிருக்க வேண்டும்.

(ஆ) அவர்கள் போதிய முதிர்பருவம் அடைந்தவர்களாயிருக்கவேண்டும்.

(இ) திருச்சபைச் சட்டத்தின்படி எவ்வித தடையுமில்லாதவர்களாயிருக்க வேண்டும்.

(ஈ) கிறிஸ்தவ வாழ்வுக்கு நற்சாட்சி அளிப்பதுடன், விசுவாசத்தைச் சொல்லாலும் செயலாலும் பாதுகாத்துப் பரப்புவதில் ஆர்வமும் அனுபவமும் உள்ளவர்களாயிருத்தல் வேண்டும்.

ஞானப்பெற்றோருக்குப் பதிலாக பெற்றோரே தங்கள் பிள்ளைகளை உறுதிப்பூசுதலுக்குச் சமர்ப்பித்து ஞானப்பெற்றோருக்குரிய கடமைகளைச் செய்யலாம். முதிர்பருவத்தை அடைந்தவர்களுக்கு ஞானப்பெற்றோரை நியமிக்க வேண்டியதில்லை. அவர்களைப் பங்குக்குருவோ, வேறொரு குருவோ, திருத்தொண்டர், வேதியர் ஒருவரோ உறுதிப்பூசுதல் அளிப்பவர் முன் சமர்ப்பிக்கலாம்.

*(34) உறுதிப்பூசுதல் திருச்சடங்கில் பொதுமக்களின் பங்கு:*

உறுதிப்பூசுதல் பெறுதற்கு வளர்ந்த கிறிஸ்தவர்களையும், புத்திவிபரமறிந்த பிள்ளைகளையும் ஆயத்தப்படுத்துவதில் கிறிஸ்தவ

[15ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அப்போஸ்தலரான புனித தோமையார்

## (5) புனித தோமையாருடைய கல்லறையின் கீர்த்தி.

புனித தோமையார் பெரிய மலையில் கொல்லப்பட்டு மயிலாப்பூரில் அடக்கம் செய்யப்பட்டதை சேர (மலபார்) நாட்டுக் கிறிஸ்தவர்கள் அறிந்து, அவ்விடங்களைத் தரிசித்து வணக்கம் செலுத்தத்தொடங்கினர். இதைத் தொடர்ந்து, புனித தோமையாரோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த சீரியன் திருச்சபைக் கிறிஸ்தவர்களும் அப்புனித இடங்களுக்குத் திருயாத்திரை செய்யத் தொடங்கினர். அவர்களுக்கும் சோழ நாட்டு அரசனுக்குமிடையில் வர்த்தகத் தொடர்பு இருந்தமையால் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி புனித தோமையார் அடக்கம் செய்யப்பட்டிருந்த இடத்தில் ஒரு துறவற மடத்தையும் கோயிலையும் கட்டினார்கள். புனிதரின் எலும்புகளை தங்கள் எதேசா நகருக்கும் எடுத்துச் சென்றார்கள். இது சம்பந்தமாக சீரியன் திருச்சபையில் நிலவிவரும் பாரம்பரியக் கொள்கை வருமாறு:

கி. பி. 165ம் ஆண்டளவில் எதேசா பட்டணத்தைச் சேர்ந்த காபின் என்ற வியாபாரி ஒருவர் புனித தோமையாரின் திருவுடலை எதேசா பட்டணத்திற்குக் கொண்டு வந்தார். அந்நகரின் கிறிஸ்தவர்கள் புனிதரின் திருவுடலைப் பத்தியோடும் ஆரவாரத்தோடும் வரவேற்று, அவருடைய பெயரால் ஒரு புதிய ஆலயம் அமைத்து, அவருடைய திருப்பண்டங்களை ஒரு கல்லறையில் வைத்தனர். இவ்விழாவை ஒவ்வொரு வருடமும் ஜூலை மாதம் 3ம் நாள் மிக ஆடம்பரமாகக் கொண்டாடி வந்தனர். இக்கூற்றிற்கேற்ப **உரோமையின் வேதசாட்சிகள் பட்டியல்** என்ற பழங்கால நூலும், "ஜூலை மாதம் 3ம் நாள்: மெசபொத்தேமியாவிலுள்ள எதேசா நகருக்கு இந்தியாவிலிருந்து புனித தோமையாரின் பூதவுடல் எடுத்துச்செல்லப்பட்ட நாள்" என்று குறித்துள்ளது.

என்ன காரணத்தினுல் புனித தோமையாரின் பூதவுடல் மயிலாப்பூரிலிருந்து எதேசா பட்டணத்திற்குக் கொண்டுபோகப்பட்டது என்று பழங்கால ஏடுகள் எதுவும் குறிப்பிடவில்லை. ஆனுல், அவ்வாறு கொண்டுபோகப்பட்ட பின்னும் மயிலாப்பூரில் புனித தோமையார் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் ஒரு அழகான கோயில் கட்டப்பட்டிருந்தது என்பதற்கும், அங்கு யாத்திரிகர்கள் தொடர்ந்து வந்து கொண்டிருந்தார்கள் என்பதற்கும் ஏராளமான சான்றுகள் உண்டு.

பிரான்ஸ் நாட்டிலுள்ள தூர்ஸ் நகரின் ஆயரான **புனித கிரகோரியார்** 6ம் நூற்றுண்டின் இறுதியில் எழுதிய **"வேதசாட்சிகளின் மகிமை"** என்ற தமது நூலில் புனித தோமையாரின் கல்லறையைப் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: "நீண்ட காலத்திற்குப் பின் அவருடைய பூதவுடல் சீரியாவிலுள்ள எதேசா நகருக்கு எடுத்துச் செல்லப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது. இந்தியாவில் அவருடைய உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் ஒரு துறவற மடமும், அழகுற அலங்கரிக்கப்பட்ட ஒரு பெரிய கோயிலும் உள்ளன. இதை அங்கே நேரில் சென்று கண்ட தியதோர் நமக்கு அறிவித்துள்ளார்".

பிரான்ஸ் தேசத்திலிருந்து இங்கிலாந்திற்கு நம் அப்போஸ்தலரின் கல்லறை பற்றிய புகழ் எளிதில் பரவியது. ஆங்கிலோ சாக்சோனியரின் அரசனுன **அல்பிரேட்** முரட்டுத் தேனியரின் முற்றிகையிலிருந்து லண்டன் நகரைக் காப்பாற்றப் போராடிக்கொண்டிருந்த வேளை புனித தோமையாருக்கு ஒரு நேர்த்தி செய்துகொண்டார். வெற்றியின் பின் நேர்த்திக்கடனை நிறைவேற்ற கி. பி. 883ல் சிஜெலினஸ் என்ற மேற்றிராணியார் மூலம் உரோமாபுரிக்கும், மயிலாப்பூரிலிருந்த புனித தோமையாரின் கல்லறைக்கும் காணிக்கைகளை அனுப்பிவைத்தார்.

பிந்திய நூற்றுண்டுகளில் செங்கடலைச் சூழ்ந்துள்ள நாடுகள் மகமதியரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டபடியால் ஐரோப்பியருக்கும் இந்தியாவுக்குமுள்ள தொடர்பு துண்டிக்கப்பட்டது. ஆனுல், சீரியன் திருச்சபைக்கும் இந்தியாவுக்குமிருந்த தொடர்பு குறையவில்லை. மத்திய காலங்களில் அராபியர் வர்த்தகத்தின் காரணமாக இந்தியாவோடு அதி

(16ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உயிரளிக்கும் ஆவியின் வருகை

(றெக்ஸ்)

மூவொரு கடவுளின் மூன்றும் ஆளாகிய தூய ஆவியின் வருகையின் விழாவை இன்னும் சில தினங்களிற் கொண்டாடவிருக்கின்றோம். எமது மறையின் கருவூலமாகிய கடவுட் கொள்கையின்படி, தூய ஆவியானவர் எமது வாழ்வில் ஒரு முக்கிய இடம் வகிக்கின்றார். தூய ஆவி என்ற இறைவன் இருக்கின்றார் என்று தெரியாதிருப்பதே வழக்கு. அவரை அறியாதிருப்பது நம் குறையேயன்றி, அவர் முக்கியமானவர் அல்லர் என்பதல்ல. வீட்டின் அத்திவாரம் வெளியே தெரியாதிருப்பதினால், அத்திவாரமே இல்லையென்பது மடமையல்லவா? சிலவேளைகளில் அதன் இயல்பு தெரிந்ததொன்றாய் இருப்பதினால் அதைப் பற்றி நாம் அதிகமாகக் கவனிக்காமல் விடுவதும், அதை மறந்து விடுவதும் இயல்பல்லவா? ஒருவேளை இந்நிலைதான் தூய ஆவியைப் பற்றியதுமாய் இருக்குமோ? அப்படியன்றேல், அவரைப் பற்றி இன்னும் சிறிது அதிகமாக அறிந்து கொள்ள முயல்வோம்.

கிறிஸ்தவ மதத்தவர்களாகிய எங்களுக்கு கிறிஸ்து பிறப்பு விழா, கிறிஸ்து உயிர்ப்பு விழா முதலிய கட்டாய விழாக்கள் இருப்பதுபோன்று, எமது மதத்தின் முன்னோடியான யூதமதத்திலும் கட்டாய விழாக்கள் இருந்தன. அவை பாஸ்கா விழா, வாரங்களின்விழா, கூடார விழா என்பன. முற்காலத்திலே யூத இடையர்கள் சித்திரை மாத முழுநிலவில் பாஸ்கா விழாவைக் கொண்டாடினர். ஒரு இளம் செம்மறியைக் கொன்று அதன் இரத்தத்தைக் கூடாரக் கால்களிற் பூசி அதன் ஊனை நெருப்பில் வாட்டிக் கசப்புக் கீரைகளோடு உண்டனர். ஆடு மாடுகளின் செழிப்புக்காகவும் அவைகளின் இனப்பெருக்கத்துக்காகவும் கெட்ட அரூபிகளின் செயல்களிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ளவுமே இவ்விழா கொண்டாடப்பட்டது. அதே மாதத்தில் பயிரிடும் சமூகத்தினர் புளியாத அப்பப்பண்டிகையைக் கொண்டாடினர். அறுவடைக்குப்பின் 7 நாட்களுக்கு புதுக்கோதுமையினாற் செய்த அப்பத்தைப் புளிக்கவைக்காது உண்ணும் விழா "மட்ஸோத்" (Matzoth) என்னும் பெயர் கொண்டது. பழையது போயிற்று கடவுளருளால் இனிப் புது வாழ்வு தொடங்குவோம் என்னும் அர்த்தத்தைக் கொண்டது. காலப் போக்கில் இவ்விருவிழாக்களும் இணைந்து ஒன்றாகிப் "பாஸ்காவிழா" என்னும் பெயர் பெற்றது.

இவ்விழா நடந்து 7 வாரங்களுக்குப் பின் (அதாவது 50 நாட்களுக்குப் பின்) கிழமைகளின் அல்லது **வாரங்களின் விழா** என ஒரு விழா கொண்டாடப்பட்டது (காண்: உபா 9/10). 50 என்னும் சொல் கிரேக்க பாஷையில் "**பெந்தகோஸ்து**" (Pentecost) எனப்படும். இவ்விழாவின் போது புதுக்கோதுமையினாற் செய்யப்பட்ட இரண்டு புளியாத அப்பங்கள் முதற் பலனாகவும் புதுவாழ்வின் தொடக்கமாகவும் இறைவனுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டன. இவ்விழா, காலம் செல்லச்செல்ல ஒரு வெறும் உழவர் விழாவாக மாத்திரம் இருக்காமல், சீனாய் வனாந்தரத்திலே மோயிசனுக்கும் கடவுளுக்குமிடையே இறைமக்களுக்காக நடந்த உடன்படிக்கையின் நினைவு விழாவுமாக வளர்ந்திருந்தது. எனவே முதற்பலன், உடன்படிக்கை என்னும் இரு கோணங்கள் கொண்ட இவ்விழா, கிறிஸ்து நாதரின் புதிய உடன்படிக்கையையும் அவரது மீட்பின் முதற் பலனுமான தூய ஆவியின் வருகையையும் நினைவூட்டும் விழாவாக மாறியதில் வியப்பெதுவும் இல்லை.

தூயஆவியின் வருகையன்று நடைபெற்ற அருங்குறிகள் அனைத்தும் மறைநூல் சம்பந்தமானவை (காண்: அப். பணி 2ம் அதிகாரம்). பெரும் காற்று: தூய ஆவி என்னும் தமிழ்ச் சொல் "றுஆஹ் யாவே" (Ruah yahweh) (எபிரேயசொல்) "ப்னெயுமா ஹகியோஸ்" (Pneuma Hagios) (கிரேக்கச்சொல்) என்பவற்றின் மொழிபெயர்ப்பாகும். றுஆஹ் அல்லது ப்னெயுமா என்பதற்குக் காற்று என்று பொருள். இதிலிருந்து இரண்டுக்குமுள்ள தொடர்பு விளங்குகின்றது. இதனாற்றான் தூய ஆவியின் வருகை ஒரு பெரும் காற்றுடன் ஒப்பிடப்படுகின்றது. தீநாக்கு

[5ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உயிரளிக்கும் ஆவியின்...

*[4ம் பக்கத் தொடர்ச்சி]*

கள்: இசையாஸ் கண்டகாட்சியையும் (இசை 6/6–7), பல மொழி பேசும் அருங்கொடையையும் (Charism of Tongues) குறிப்பிடுகின்றன. பலமொழி பேசுவதன் உண்மையான அர்த்தமென்னவெனில் பல சாதியினருக்கும் நற்செய்தி அறிவிக்கப்படுகின்றது என்பதுதான். பழைய உடன்படிக்கை யூதர்களுக்காக நடைபெற்றது; ஆனால் புதிய உடன்படிக்கை மனுக்குலம் முழுவதின் மீட்புக்காகவும் நடைபெறுகின்றது. கிறிஸ்துவின் வருகைக்குப்பின், யூதர், பிறர் என்ற பேதமில்லை. அனைவரும் இறைவனின் மக்கள்; அனைவருக்குமே நற்செய்தி உரியது. பாபேல் கோபுர நிகழ்ச்சிக்கு பெந்தகோஸ்து அல்லது தூய ஆவியின் வருகை முற்றிலும் எதிர்மாறானது. முன்னையது ஒன்றாயிருந்த மக்கள் குழாமை மொழியின் மூலம் பிரித்து வைத்தது. பின்னையது மொழியின் மூலமே மக்களை ஒன்றுபடுத்துகின்றது. இதுதான் ஒரு மொழியிற் பேசப் பலமொழிகளில் விளங்கிக் கொண்டதன் உட்கருத்து.

ஆயினும் அன்று நடந்த நிகழ்ச்சிகளிலிருந்தும், அந்நிகழ்ச்சிகளை விபரிக்கக் கையாண்டிருக்கும் சொற்களிலிருந்தும் உவமான உவமேயங்களிலிருந்தும், தூய ஆவியின் வருகை திருச்சபைக்கு ஒரு மகத்தான, இதுவரை இல்லாத திடீர் மாற்றத்தையும் வளர்ச்சியையும் கொண்டு வந்தது என விளங்குகின்றது. அடங்கியொடுங்கியிருந்த திருச்சபை பகிரங்கமாக வீரநடை போட்டு வெளியுலகிற்கு வருகின்றது. ''நாட்கள் நிறைவுற்றதும்'', ''பெருங்காற்று'', ''தீநாக்குகள்'', ''ஒவ்வொருவர் மேலும் தங்கிற்று'', ''பரிசுத்த ஆவியை நிரம்பப் பெற்று'' முதலிய சொற்கள், இவ்வனுபவத்தின் முதன்மைத் தன்மையையும் புதுமைத் தன்மையையும் எடுத்தியம்புகின்றன.

தூய ஆவியின் வருகையினால் திருச்சபை வெளியுலகுக்கு வரும் உறுதியையும், போதிக்கும் வல்லமையையும் மாத்திரம் பெறவில்லை, ஆனால் **அது ஒரு புதிய வாழ்வைப் பெற்றது**. என்பது தெளிவாகின்றது. கிறிஸ்துநாதரின் போதனைகளும் அன்புக் கட்டளைகளும் வாழ்க்கையின் வழிகாட்டிகளாக இப்புதிய மறைச் சமூகத்திற் திகழ்கின்றன (காண்: அப். பணி 2/42–47). தூய ஆவியின் வருகையினால் இம்மறைச் சமூகத்தில் ஒரு புதிய இன்பகரமான ''தோழமைச் சூழ்நிலை'' உருவாகின்றது. அதைச் சகோதரத்துவம் என்றோ, அன்னியோன்னியம் என்றோ கூறலாம். ஆயினும் புதிய ஏற்பாடின் மூல மொழியான கிரேக்க மொழியில் காணப்படும் ''கொய்னோனியா'' (Koinonia) என்னும் சொல்லின் சரியான அர்த்தத்தை வெளிப்படுத்தமுடியாது. ஆங்கிலத்தில் இதன் பொருள் ''Fellowship'' என்னும் சொல்லினால் மொழிபெயர்க்கப்படுகின்றது.

ஒரு கரு தாயின் வயிற்றில் வளர அதற்கு ஏற்ற சூழ்நிலை எவ்வாறு அவசியமோ, உலகில் நாம் வாழப் பொருத்தமான சூழ்நிலை (Atmosphere) எவ்வாறு அவசியமோ, அதே போன்று திருச்சபையென்னும் மறைச் சமூகத்தில் வாழ அன்பும் கூட்டுறவும் அன்னியோன்னியமும் நிறைந்த ஒரு சூழ்நிலை அவசியம். அதை அளிப்பவர் தூய ஆவி. பலவகைப் பறவைகளும் வந்து தங்கி வாழக்கூடிய வகையில் பரந்து வளர்ந்திருக்கும் திருச்சபையென்னும் மரத்திற்கு அடியிலிருந்து முடி வரை உயிர்ச்சாறாக ஊறி நிற்பவர் இந்தத் தூய ஆவிதான். கிறிஸ்து கொணர்ந்த புது வாழ்வையும் அதன் விளைவுகளையும் தேவைக்கேற்ப, தகுதிக்கேற்பப் பகிர்ந்து கொடுப்பவரும் அவரே. வாழ்க்கையிலே மனிதன் தன் கால்களிலேயே ஊன்றி நின்று, பண்புள்ள தகுதியுள்ள வாழ்வு வாழவேண்டுமாயின் அவனிடத்திற் சில குணநலன்களும் தகுதிகளும் இருத்தல் அவசியம். அதே போன்று ஆன்மீகத் துறையிலும் புனித வாழ்வு வாழ இத்தகைய குணநலன்கள் இன்றியமையாதவை. முன்னையதற்கும் பின்னையதற்கும் வேண்டிய அத்தனையையும் அளிப்பவர் அவரே.

எவ்வாறு பயிருக்கு நீரும், உயிருக்குக் காற்றும் அவசியமோ, அவ்வாறு மனித வாழ்வுக்கு ஆவியின் அருளும் அவசியம். இதை உணர்ந்துதான் வாழ்வின் முப்பெரும் படிகளைக் குறித்துக் காட்டும் திருமுழுக்கு, உறுதிப்பூசுதல், திருப்பட்டங்கள் முதலிய திருஅருட்சாதனங்கள் தூய ஆவியானவரோடு இணைக்கப்பட்டுள்ளன. இவர்தான் திருச்சபைக்கு என்றும் அழியா இளமெருகூட்டி எக்காலத்தும் அழகுநிறைந்த தாயாகத் திகழவைக்கின்றார். இவர்தான் இவ் அன்புச் சமூகத்தைக் காலங்களுக்கு ஏற்றவாறு மெருகூட்டி, புனிதப்படுத்தி, மாற்றி மலரவைக்கின்றார். திருச்சபைக்குப் பலநிலை கொண்ட திருத்தொண்டினை – Hierarchical Diakonia– அளிப்பவரும் இவரே.

இதனாற்றான் திருச்சபை தூய ஆவியானவரைத் தேற்றரவாளர், அர்ச்சிப்பவர், இணைப்பவர், வாழ்வளிப்பவர் என்றெல்லாம் போற்றுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# "தேவ ஆலயம்" (2)

## (துரை)

யூதருடைய ஆலயமும் (கூடாரம்) சட்டமும் மோயீசன் மூலம் கடவுள் கொடுத்தவை. யூததலைவர் அவற்றின் புனிதத்தை மறந்து, கருத்தைத் திரித்துப் பாவனையைப் பிழைத்துத் துரோகம் செய்தனர். அதுவே பிரிவினைக்கும் அழிவுக்கும் காரணமாயிற்று. சமாரியர் பிரிந்து "கேசரியின்" குன்றின் மேல் வழிபாடு நடத்தினர். அதனால் யெருசலேம் ஆலயத்தின் தனி உரிமை தகர்ந்து போயிற்று. கடவுளின் இடமாகக் கோவிலைக் கும்பிடல், கடவுளுக்கமையாது கட்டளையைக் கூறுதல் இவை அநாசாரம். இதற்கு இயற்கையான தண்டனை அழிவு. இதற்கு மனிதகுல சரிதையே சாட்சி. கடவுளோடு நாம் தொடர்புகொள்ள உதவும் இடம் தான் தேவ ஆலயம். அந்தப் பிரதான கருத்தை மறந்து வேறு ஆரவாரங்கட்கு நாம் பாவித்தால் அது அநாசாரமாகும்.

இறை வாக்கினரான யெரேமியா இறைவன் அறிவித்த தண்டனையைப் பயமின்றிப் பகிரங்கமாக எடுத்துரைத்தார். உடனே அவரைப்பிடித்து அடித்தார்கள், வதைத்தார்கள், தேவ தூஷணம் சொல்லுகிறான் என்று கொலைக்குத் தீர்த்தார்கள். எரேமியா வாதாடினார். கடவுள் சொன்னதைச் சொல்வது கொலைக்குற்றமா? "நான் இந்த ஆலயத்தைச் சீலோவைப் போலாக்கி இந்த நகரத்தைப் பூமியிலுள்ள எல்லாச் சாதிகளுக்குமுன்பாகவும் சாபமாக்கிப்போடுவேன் என்று கர்த்தர் உரைக்கிறார்" (யெரே. 26 , 6.) சீலோ பலித்தலம். அப்போது அழிநிலமாகிக் காடாய்க் கிடந்தது. அப்படியே ஆலயமும், நகரமும் அழியும் என்ற எச்சரிக்கையை யோவாக்கீம் எதிர்த்தான். உறியாகு என்ற இறைவாக்கினரைக் கொன்றான் (யெரே. 26. 20.) மிக்கேயா போதித்தபோது எசக்கியாஸ் மன்னன் தவம் செய்து மனந்திரும்பியது போல் (யெரே. 26. 18.) செய்ய மறுத்தான். எரேமியாவையும் கொல்லப்பார்த்தான். ஆனால் அக்கீகாமும் வேறு சிலரும் அவரைக் காப்பாற்றினார்கள். அன்று ஆண்டவனை மதியாது வாழ்ந்தவர்கள் ஆலயத்தைக் கடவுளாக மாற்றி அதன் போர்வையிலே எல்லா அநியாய அட்டூளியங்களையும் செய்தார்கள். இதுதான் விக்கிரக ஆராதனையின் உச்சம். இறைவன் இதை வெறுக்கிறார் ஒதுக்கிறார். நமது மூதாதைகளின் வேதங்களிலும் தேவதைகளின் பேராலே சட்டமும் தூர்த்தமும் சரி என்று சாதித்ததுபோலவே அங்கும் நடந்தது. அசீரியரும் பபிலோனியரும் கடவுளின் சவுக்காக வந்தார்கள். தண்டனை கொலையிலும் அழிவிலும் அடிமைத்தனத்திலும் முடிந்தது.

இயேசுவின் காலத்திலும் நிலைபரம் திரும்பவும் இக்கட்டான கட்டத்தை எட்டிவிட்டது. மனுசே, யோவாக்கீம் காலத்திற் போலவே, அன்னாசின் ஆதிக்கம் உலகாதாய மோகத்திலே மூழ்கிவிட்டது. யூத வேதவழிபாடு வெளியாசார வேடிக்கை நாடகமாக மாறிவிட்டது. அசீரியர் பபிலோனியர் போலவே றோமர் கடவுளின் சவுக்காக அமையும் காலம் எட்டவில்லை. அதைக் கிறிஸ்து கண்டார். துயரத்தோடு அறிவித்தார். மனிதர் மாறவில்லை. அழிவும் வந்தது. ஆனால் இறைவன் கருணையின் மருந்தை அவர் ஏலவே அளித்துப்போனார்.

சமாரிய பெண்ணுடன் செய்த சம்பாசனையிலே இயேசு சொல்வார்; "நேரம் வருகிறது — ஏன்வந்தே விட்டது — அப்போது மெய்யடியார்கள் உயிரிலும், உண்மையிலும் பரம தந்தையைத் தொழுவார்கள். ஏனெனில் தம்மைத் தொழும்படி தந்தை இத்தகையோரையே தேடுகிறார் (அரு. 4 : 23). எருசலேம் தேவாலயத்தில் மிருகங்களையும் விளைபொருட்களையும் கொலை செய்து தகனித்தழிக்கும் பலியல்ல, உண்மையான கடவுளை நினைந்து அவனுக்கு ஆன்மாவை அளிக்கும் புதிய பலி வந்துவிட்டது என்கிறார் மீட்பர். அதுவும் ஒரு அந்நிய விபசாரப் பெண்ணுக்கு இந்த உண்மையை அறிவிக்கிறார், எல்லாருக்கும் இது பொது என்று உணர்த்த கிறிஸ்து தாமே இந்த உத்தம பலியை முதல் ஒப்புக் கொடுத்து மனித சரிதையின் முடிவு யுகத்தைத் தொடக்கி வைத்தார்.

அந்நிய நாட்டில் அடிமைகளாய் அவதிப்படும் அகதிகளுக்குத் தாமே பரிசுத்ததலம் என்று யாவே எசக்கியேல் மூலம் சொல்லுகிறார் (எச. 11 : 16.). அதேபொருளில் அரு

[7ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தேவ ஆலயம்...

[6ம் பக்கத் தொடர்ச்சி]

எப்பரும் பரலோக யெருசலேமிலே கடவுளும் செம்மறியுமே ஆலயம் என்று காட்சியிலே கூறுகிறார் (திருவெளிப்பாடு 21 : 22). இந்தப் புதிய ஆலயத்திலே நின்று உயிர் நீரூற்றுச் சுரந்தோடும் என்று எசக்கியேல் (47; 1 - 12) யோவேல் (4 – 18) சக்கரியா (14 - 8) அறிவித்தார்கள். வனாந்தரத்திலே தாகத்தினால் தவித்த இஸ்ராயேலர் கற்பாறையினின்று நீர் பருகினர். அதுபோலத் தாமும் அருள் நீர் அளிக்கப் போவதாகக் கிறிஸ்து அறிவிக்கிறார் (அரு 7 : 38). கடவுளின் அர்ச்சிய உயிரைப் பற்றியே இதைச் சொன்னார் என்று விளக்குகிறார் அருளப்பர் (அரு. 7 : 39). ஆனால் இயேசு மகிமை பெறுமட்டும் காத்திருக்கவேண்டும். புதிய ஆலயமான அவரின் உடல் கல்லறையில் நின்று உயிர்த்தெழவேண்டும்; விண் ஏறி இறைவன் வலத்தில் உறைய வேண்டும். அப்போதுதான் அந்தப் பரிசுத்த ஆவி இறங்கி வருவார், நிறைவு தருவார்.

கிறிஸ்து கட்டின கோவில் அவரது மகிமை உடல். கடவுள் அதிலேதான் ஒரு பொருளாகிப் பிரியமாக வாழ்கின்றார். அதை நாமறிவது இன்றியமையாதது. கடவுளின் வாழ்வில் நிறைவான பங்கு பெறுவதே நமது ஆயுளின் இலட்சியம். அதற்கு இறைவன் அளித்த வழி, தந்த மாதிரி கிறிஸ்து. சடமில்லாக் கடவுள் மைந்தன் உயிரும் உடலும் கொண்ட ஒரு மனிதனாய் ஒன்றித்துப் பிறந்து விழுமிய வழியில் வாழ்ந்து காட்டினார். உலக மனிதரை நாம் அவதானித்தால் அவர்கள் தம்மையே கடவுளாகவும் (முதலிடம் பெறுபவர்) தமது உடலையே கோவிலாகவும் (அலங்கரிக்குமிடம்) கும்பிடுவதைக் காணலாம். வேதமும் இந்த விக்கிரகத்துக்குத் தூபம் போடவே உதவுகின்றது. நமது மூதாதைகளின் வேத விருத்தாந்தங்களும் புராண இதிகாசங்களும் இதற்கு மறுக்கமுடியாத சாட்சிகள். இந்த மனிதர் கட்டிய கோவில் இடியவேண்டும், அழியவேண்டும். எப்படி இயேசுவின் உயிர் கொடூரமான அநியாய பீடைமரணத்தை ஏற்றதோ, அவர் உடல் வரை - கடந்த கொடிய வாதைகளைத் தாங்கியதோ அப்படியே நாமும் இடியவும் மடியவும் தயாராகவேண்டும். அப்போதுதான் கடவுள் எம்மையும் தமக்குகந்த ஆலயமாகக் கட்டி எழுப்பமுடியும்.

எமது வாழ்விலே அழியும் உடலோடு அழிவதுபோலவே கல்லுக்கோவில் கட்டவும், பிரசாதப் பெட்டி மூட்டவும் பெரும் பிரயாசை எடுக்கின்றோம். ஆனால் மகிமைக் கடவுளின் நித்திய ஆலயம், அப்ப உருவில் மறைந்திருக்கும் கர்த்தரின் உடலை எத்தனை பேர் அறிவோம்; அதின் பலனை அடைவோம்? சாதாரண அப்பத்தை அறியாது, நினையாது உண்டால் அது செமிக்கும், சுவி கொடுக்கும். ஏனென்றால் அது தாவர சீவியத்தைச் சேர்ந்த செயல். ஆனால் இயேசு அப்பம் மெத்த வித்தியாசம். மிருக சீவியம் கடந்து மனித சீவியம் தாண்டி உயிர்வாழ்வை வளர்ப்பது அது. அப்படியாயின் நாமெங்கே! நமது இலட்சியம் எங்கே! விசுவாசமுள்ளவர்களுக்கு மாத்திரம்தான் அது மீட்பர் கிறிஸ்து. எமக்கு விசுவாசம் உண்டு என்கின்றோம். உண்மையாகவா? நமது நளாந்த வாழ்க்கை நாம் எம்மை அணுப்புகிறோம் என்று காட்டுகின்றது; நமது பொய்யை அம்பலமாக்குகிறது.

வேதாகமத்திலே மறைந்திருக்கும் இயேசுவை படித்தறிய நாம் முயற்சி எடுத்தபோது நற்கருணையிலே மறைந்திருக்கும் இயேசுவை நாம் பற்றிக்கொள்ளமுடியாது. நாம் நமது ஆன்ம சக்திகளை அவருக்குக் கொடுக்காவிடில் அவரும் தம்மை எமக்குக் கையளிக்கமாட்டார். ஆகவேதான் ஆதித் திருச்சபையிலே அப்பம் பிட்குமுன் அப்போஸ்தலர் போதகம் படிப்பதும் அன்புறவு செய்வதும் (பணி 2 : 42) இன்றியமையாத நிபந்தனையாயிருந்தது. அந்தச் சபையிலே கிறிஸ்துவை அறிந்தார்கள், அருந்தினார்கள், வாழ்விலே தோத்திரம் பாடினார்கள். ஆனால் நாம்?

கிறிஸ்துவின் உடல் பிரசாத நீரூற்று. உயிர்த்த மீட்பர் அங்கு இருக்கின்றார். அவருடைய பரலோக வாழ்வையும், பூலோக வாழ்வையும் அவர் முன்னிலையிலே திருச்சபை அறிவிக்கிறது; அவர் தந்த அருட்சாதனங்களைப் பகிர்கின்றது. திருச்சபை தரும் அருட்பொருட்கள் நாம் கிறிஸ்துவைச் சந்திக்கும், பந்திக்கும், புசிக்கும், சுகிக்கும், பணியும், அணியும் சாதனங்கள். அவரோடு நாம் கொள்ளும் உறவினால் அவருருவாக மாறுகிறோம். சடஉடலின் அடையாளங்களின் மூலம் சத்து சித்து ஆனந்த சொரூபியாம் கடவுளின் உயிர்வாழ்விலே சேர்கின்றோம்.

இதுவே மூன்று ஆள் ஒன்றான கடவுள் கிறிஸ்து மனிதனில் எமக்கு எழுப்பித்தந்த ஆலயம். இதிலே நுழைவோம், இறைவனைத் தொழுவோம், அவனை அறிவோம், ஆசிப்போம், நேசிப்போம் அப்போது கிறிஸ்து எம்மில் வாழ்வார்; நாமும் அவரில் வாழ்வோம். அதுவே மோட்ச வீடு. ✽

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இறைவன் அளித்த பதில் (1)

விடியற்காலை ஆறு மணி. பூத்துக் குலுங்கி நிற்கும் தன் செழிப்பான நெல் வயல் நடுவே வாய்க்காலிற் பாய்ந்துவரும் காட்டு வெள்ளத்தை அணைபோட்டுத் தடுத்து நீரை அளவளவாகப் பாயவிட்டுக் கொண்டிருந்தான் சாந்தன். தைமாதத்தின் வெடவெடக்கும் மூடுபனியிலும் அதிகாலையிலேயே எழுந்து மண்வெட்டியும் கூடையுமாக வயலுக்குச் சென்று நீர் பாய்ச்சுவதென்றால் சாந்தனின் நெஞ்சுரந்தான் என்னே? சாந்தனின் இவ்வளவு கடின உழைப்புக்குக் காரணமென்ன?

இளம் வயதில் தாய்தந்தையரை இழந்தவன் சாந்தன். அவர்கள் இறக்கும்போது சாந்தனை மட்டும் இவ்வுலகில் தனியாக விட்டுச் செல்லவில்லை. அழகே உருவான ஒரு தங்கையையும்கூட அல்லவா சாந்தனுக்குத் துணையாக விட்டுச் சென்றனர். ஆதரவற்ற நிலையில் அனாதைகளாக விடப்பட்ட இரு பிஞ்சு உள்ளங்களுக்கும் அன்பு காட்டி ஆதரவளிக்க அவ்வூரில் ஓர் அன்புருவம் இருந்ததென்றால், அதுதான் சாந்தன் **அந்தோனித் தாத்தா** என்றழைக்கும் பிரம்மச்சாரிக் கிழவர். பெற்றோர் பிரிவைத் தாங்கமாட்டாது புழுவாய்த் துடித்த இரு மழலைச் செல்வங்களையும் தேற்றி ஆறுதல் சொல்லிச் சாந்திப்படுத்துவதே அன்று கிழவருக்குப் பெரும் பாடாய்ப் போய்விட்டது.

நாட்கள் பல உருண்டோடின. சாந்தனும், சாந்தியும் பெற்றோர் பிரிவுத் துயரை மறந்து சகஜ நிலைக்குத் திரும்பியிருந்தனர். அவர்களுக்கு இப்போது அப்பா, அம்மா எல்லாமே அந்தத் தாத்தாதான். அவர்களிருவரும் தன்னைத் தாத்தா என்றழைக்கும் ஒவ்வொரு கணமும் அவர் இவ்வுலகையே மறந்து ஆனந்த சாகரத்தில் மூழ்கிவிடுவார். அவ்வளவு இனிமை அவர்கள் மழலைப் பேச்சில். அவர்கள் தன்னை மீண்டும் மீண்டும் அழைக்க வேண்டுமென்பதற்காக வேண்டுமென்றே கேட்டும் கேளாததுபோல் இருந்து விடுவார் தாத்தா. அவர்களோடு சேர்ந்து விளையாடும் போதெல்லாம் தானும் ஒரு குழந்தையாகி விடுவது தாத்தாவின் சுபாவம். அந்த மூன்று உள்ளங்களையும் ஒன்றாக ஒரு தெய்வீகத் தன்மை பிணைத்திருந்தது என்றுதான் சொல்ல வேண்டும். குழந்தைகள் இன்றி தாத்தா இல்லை. தாத்தா இன்றிக் குழந்தைகள் இல்லை' அவ்வளவு அன்புப் பிணைப்பு.

வருடங்கள் பல கடந்தன. நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்பிறைபோல் வளர்ந்து விட்ட சாந்தனுக்கும் சாந்திக்கும் பொங்கியெழும் அறிவுப் பசியைத் தீர்க்க உதவியது பக்கத்திலிருந்த கிராமத்துப் பாடசாலை. கல்வியில் அவர்களுக்கிருந்த ஆர்வமும், ஆசிரியர்களுக்கு அவர்கள் காட்டும் மரியாதையும் அவர்களுக்கு மட்டுமல்லாமல் அவர்களைத் தூய வழியில் நடத்தும் அந்தத் தாத்தாவுக்கும் அனைவர் மத்தியிலும் பெருமதிப்பைத் தேடிக்கொடுத்திருந்தது. முன்பெல்லாம் தன் வயலைத் தானே பண்படுத்திப் பயிரிட்டு வந்தார் தாத்தா. ஆனால் இப்போது அந்தக் கடமை சாந்தன் கைக்கு மாறியிருந்தது. பள்ளியில் படித்து வயலில் வேலை செய்வதுடன் மட்டும் சாந்தன் நின்றுவிடவில்லை. அவனுக்கு இவற்றையெல்லாம் விடப் பெரிய கடமை ஒன்றிருந்தது. அதுதான் ஞாயிறு பூசைப்பலி

**A. நெல்சன்,**
தியாவட்டவான், வாழைச்சேனை.

ஆரம்பிக்க வெகு நேரத்துக்கு முன்னமே தேவாலயத்துக்குச் சென்று தங்கையோடும், தாத்தாவோடும் கூடி தேவதாயாரின் திருச்சொரூபத்தின் முன்னால் மிகவும் உருக்கமாக செபமாலைத்தியானத்தில் ஈடுபடுவது. அவர்கள் செபிக்கும் அழகு ஏனையோர் மனதிலும் ஒரு பக்திப் பரவசத்தை ஊட்டும். பூசை வேளைகளில் சப்தமாக செபிக்கவோ பாடவோ அவர்கள் ஒருபோதும் பின்நிற்பதில்லை. கன்னியர் கண்களைக் கவரவென பளபளக்கும் காற்சட்டை சேட்டும் கண்ணாடி போல் 'பொளிஸ்' செய்யப்பட்ட விதவிதமான சப்பாத்துக்களும் அணிந்துகொண்டு தேவாலயத்துள் வீறு நடைபோடும் காளையரையும், காளையர் இதயக் கமலங்களைப் பிடுங்கிக்கொண்டு போகும் போட்டியில் முதலிடம் பெற்றுவிடும் நோக்கிலோ என்னவோ மார்புக்கச்சையை வெளியில் அப்பட்டமாக படம் பிடித்துக்காட்டும் 'பொலித்தீன்' கடதாசி

[9ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இறைவன் அளித்த...

*(8ம் பக்கத் தொடர்ச்சி)*

போன்ற மேலாடையும், தொடைக்குமேல் ஏற்றி விடப்பட்ட கட்டைக் கவுணும் அணிந்துகொண்டு தேவாலயத்தை காமக்களியாட்டம் நடாத்தும் கொட்டகையாக நினைத்துவரும் கன்னியரையும் காணும்போதெல்லாம் சாந்தன் மனதில் அளவிடமுடியாத வேதனையும் அளவுக்கு மீறிய அருவருப்பும்தான் தோன்றும்.

எழிய தோற்றமும், அறிஞர் பொன்மொழிகளுக்கொப்ப வாழ்க்கையும், கற்ருேர் சினேகமும் கொண்ட சாந்தன் இப்படிப்பட்டவர்களை ஏறிட்டுப்பார்க்கவும் கூசுவான். இவர்களில் பலர் தன்னைப் பட்டிக்காடு என்று கேலிசெய்வதை சாத்தன் தன் காதுகளால் கேளாமலும் இல்லை. ஏதோ தாங்கள் நாகரீகத்தில் முதிர்ந்தவர்கள் என்றும், ''நாங்கள் வாய்திறந்து செபிப்பதோ பாடுவதோ எங்களுக்கு அழகல்ல'' என்று நினைத்துக் கொண்டு பூசை வேளையிலும் சேஸ்டைகள் செய்துகொண்டு மற்றையோரையும் செபிக்கவிடாது வெறியாட்டம் போடும் மந்த புத்தி படைத்த நாகரீக மேதைகளுக்கு அவன் சொல்ல நினைப்பது: ''நாகரீகம் என்ற போர்வையில் வேடதாரிகளாக போலி வாழ்க்கை நடாத்துவது அல்ல, மனிதன் மனிதப் பண்போடு மனிதனுய் வாழ்வதுதான் உண்மை நாகரீகம்'', என்ற காந்தி மகானின் பொன்மொழியையே, இன்றைய இளைஞர்கள் தமது எதிர்காலத்தைப் பற்றிச் சிறிதேனும் சிந்திப்பதில்லை. அவர்களுக்குத் தேவையானதெல்லாம் உல்லாச வாழ்வும் கன்னியரின் சினேகமுந்தான். அவர்களாக உழைத்துச் சாப்பிடும் இக்கட்டான நிலை ஏற்படும் போதுதான் முன்பு அவர்கள் விட்ட தவறுகள் தெரிய வருகின்றன. தாங்கள் காற்சட்டை அணிந்துவிட்டால் வயலில் இறங்கி விவசாயம் செய்ய வெட்கமடைகின்றனர். இந்த இழி நிலையாலல்லவா இன்றைய சமுதாயம் பட்டினியால் செத்து மடிந்துகொண்டிருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டமும் பயங்கரவாதச் செயல்களும் தாண்டவமாடும் இன்றைய நிலைக்குக் காரணம்யாது. அரசாங்கங்களுக்கு மட்டுமா? நாட்டின் இளைஞர்களுக்கும் இதில் நிறையப் பங்குண்டு.

சாந்தன் அவ்வூருக்கே ஒரு முன்மாதிரியான இளைஞன். அவன் வாழ்வெல்லாம் தன் உயிரினும் மேலான தங்கைக்காகவும் ஆதரவற்ற நிலையில் அனுதைகளாக விடப்பட்ட தங்களை அரவணைத்து அன்பு காட்டி இப்பொல்லாத உலகின் மாயைகளில் சிக்கித் தத்தளிக்காது, நித்திய வாழ்விற்கு வழி நடத்துகின்ற சத்தியங்களைப் போதித்து உலகில் உன்னத கிறிஸ்தவர்களாய்த் தாங்கள் வாழ வழிகாட்டிய அந்த உத்தமக் கிழவருக்காகவுமே. இவர்களைத் தனக்குகந்தவர்களாக உருவாக்கித் தரவே அந்தத் தாத்தாவை இறைவன் இவ்வளவு நாட்கள் உயிரோடு விட்டுவைத்திருந்தார். இறைவன் சாந்தனின் நேர்மைக்கும் உழைப்புக்கும் பரிசாக அவன் வயலில் தாராளமான விளைச்சலைக் கொடுத்திருந்தார். அந்த வேளையில்தான் சாந்தன் தன்மேல் கொண்டுள்ள விசுவாசத்தை அளவிட்டுப் பார்க்க இறைவன் விரும்பினுர் போலும். வயதால் முதிர்ந்துவிட்ட தாத்தா நோய்வாய்ப்பட்டு படுக்கையில் வீழ்ந்தார். தாத்தா இன்னும் நெடுநாள் தங்களோடு வாழவேண்டுமென்ற ஆசையால் சாந்தன் தனக்குத் தெரிந்த சிறந்த டாக்டர்களிடமெல்லாம் ஓடினுன். அவர்களும் தங்களால் இயன்ற வரையில் தாத்தாவைக் காப்பாற்ற முயன்றனர். அவன் டாக்டர்களை மட்டும் நம்பவில்லை. அவர்களைவிட மேலான வைத்தியர் இன்னெருவர் இருக்கிருர் என்பது அவனுக்கு எப்போதும் தெரியும். பீடத்தண்டையில் போய் நற்கருணை நாதரிடம் தன் குறையைச் சொல்லி கண்ணீர் விட்டழுதான். தங்கையுடன் கூடி செபமாலைத் தாயின் படத்தின் முன்னுல் முழந்தாட்படியிட்டு செபமாலைத் தியானங்கள் பல செய்தான். ஆனுல், வானமும் பூமியும் ஒழிந்து போனுல் கூட ஓர் எழுத்துத்தானும் நிறைவேருமல் போவதில்லையே இறைவனுடைய சித்தத்தில். தாத்தாவை உடனடியாக தன் பாதத்தண்டையில் இழுத்துக் கொள்ள வேண்டுமென்பது இறைவனின் சித்தமாயிற்று. அன்றொரு ஞாயிற்றுக்கிழமை, சாந்தனும் சாந்தியும் வழமைபோல் காலை திவ்விய பலிபூசையில் கலந்துகொண்டு தங்கள் தாத்தாவுக்காக இறைவனிடம் உருக்கமாக மன்ருடிவிட்டு வீடு திரும்பினர். அன்று மாலை வழக்கத்துக்கு மாருக சிறிது உற்சாகமாகக் காணப்பட்ட தாத்தாவைக் கண்ட சாந்தனுக்கும் சாந்திக்கும் மட்டற்ற மகிழ்ச்சி. அப்போது தாத்தா சாந்தனை அழைத்து உடனடியாக குருவானவரை அழைத்துவரச் சொன்னுர். அவரது இந்த வார்த்தைகள் அவர்கள் மனதில் குடிகொண்டிருந்த சிறிது நேர மகிழ்ச்சியை வேட்டு வைத்துத் தகர்த்தெறிந்தது போல் தோன்றியது குருவானவரிடம் அவஸ்தை பெற்றுக்கொண்டார். நற்கருணை நாதனை இதயக் கோயிலில் ஏற்றிவைத்துக்

[12ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வண. அலோசியஸ் அலோசிங்க அடிகளாரின் மறைவு.

கடந்த ஈராண்டுகளாக, தாண்டவன் வெளி புனித சூசையப்பர் வயோதிப இல்லத்தில், தனது இறுதிநாட்களைக் கழித்து வந்த எமது சங்கைக்குரிய அலோசியஸ் அலோசிங்க அடிகளார் சென்ற 16-4-1971 இறைவனடிசேர்தார். இவர், 1897ம் ஆண்டு புரட்டாதி மாதம், 30ம் திகதி, கேகாலையில், புத்த மதத்தினர்களாகிய பரோன் சிங்கோ, அரோ காமி என்பவர்களுக்கு மகனாய்ப் பிறந்தார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியைக் கேகாலையிலும், உயர்தரக்கல்வியைக் காலி புனித ஞானப்பிரகாசியார் (St. Aloysius' College, Galle) கல்லூரியிலும், இறுதிப்படிப்பினை மட்டக்களப்புப் புனித மிக்கேல் கல்லூரியிலும் படித்து முடித்தார். இந்நாட்களிலே, அவர் இயேசுசபைக் குருமாரின் அயராத உழைப்பினாலும், முன்மாதிரிகையான கிறிஸ்தவ வாழ்க்கையினாலும் உந்தப்பட்டு, ஞானஸ்நானம் பெற்றுக் கிறிஸ்தவனாகும் பாக்கியத்தையடைந்தார். மேலும் தனக்குக் கிறிஸ்துவை அளித்த இயேசுசபைக் குருக்களைப் போல தானும் ஒரு குருவாகிப் பணிபுரிய ஆவல் கொண்டார்.

இந்தியாவில் செம்பகனூரிலும், கண்டி பாப்பரசார் குருமடத்திலும் தனது குருத்துவப் படிப்பினைச் சிறப்புடன் முடித்து, 1931ம் ஆண்டு ஐப்பசித்திங்கள் 4ம் நாள் திருமலை மேற்றிராசனத்தின் குருவாகப் பட்டம் பெற்றார்.

இளங்குருவாக ஈராண்டுகள் கல்முனையில் ஆங்கிலம் கற்பித்தபின், சொறிக்கல்முனையில் பங்குக்குருவாகப் பணிபுரிந்தார். தொடர்ந்து தன்னாமுனை, மாந்தீவு, ஹிங்குறுக்கொடை ஆகிய பங்குகளில் 29 ஆண்டுகள் பணிபுரிந்து, 1965ல் பங்குவேலையில் இருந்து இளைப்பாறி புளியந்தீவு, தாண்டவன்வெளி ஆகிய இடங்களில் தங்கி இருந்தார். இளைப்பாறிய பொழுதும் இன்முகத்துடன் தன்னிடம் வருவோருக்கும், வேண்டியபொழுதும் பாவசங்கீர்த்தனப் பணியை ஆற்றிவந்தார். அவரிடம் சென்று ஆறுதல் அடைந்தவர் எண்ணற்றோர் ஆகும். தள்ளாத வயதிலும் எந்நேரமும் வாசிப்பிலும் செபத்திலும் தன் வாழ்நாளைக் கழித்தார்.

மலேரியா நோய் அவரை இளம் குருவாய் இருந்தகாலம் தொட்டு அதிகம் வாட்டி வதக்கியிருந்தபோதும், தன்னை ஒறுத்து வாழத் தவறவில்லை. ஈற்றிலே தாண்டவன் வெளி வயோதிபர் இல்லத்தில், கன்னியர்களின் பராமரிப்பில் தன்கடைசி நாட்களை இன்பமாய்க் கழிக்கும் பாக்கியம் பெற்று, இறைவனின் அருளால் இறுதித் தேவதிரவிய அனுமானமும் பெற்று, 16-4-1972ல் தனது 75ம் வயதில் இறைவனடி சேர்ந்தார்.

அருட்திரு அலோசிங்க அடிகளார் உயர்ந்தகுணமும் சிறந்த பண்பும் கொண்டவர். கீழ்ப்படிவு, எளிமை, மனவுறுதி, ஈகை, இரக்கம், கடமையுணர்ச்சி யாவும் படைத்தவராய் விளங்கியவர். திவ்விய பூசைப்பலி ஒப்புக்கொடுப்பதில் ஓர் தனி இன்பம் கண்ட ஒரு உத்தமகுரு. அன்னாரின் அடக்கச் சடங்குகள், மட்டக்களப்பு புனித மரியநாயகி உடன்-மேற்றிராசன ஆலயத்தில் துணைஆயர் வந். தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களால் நிறைவேற்றப்பட்டது. குருமார், கன்னியர், துறவறச் சகோதரர்கள், அவரின் பணியைப் பெற்ற மக்கள் குழாம் தங்கள் இறுதி மரியாதையைச் செலுத்த மேற்றிராசனத்தின் பல பாகங்களிலும் இருந்து வந்தனர்.

கருணை நிறைந்த இறைவன், இவரின் விசுவாச வாழ்விற்குத் தகுந்த சம்பாவனையை அளிப்பாராக.


**எதிர்பாருங்கள்**

ஜூன் மாதத் 'தொண்டன்' பாலையூற்றுத் திருப்பதி பற்றிய கட்டுரை, வரலாறு, கதை முதலிய அம்சங்களுடன் உங்களை மகிழ்விக்க வருகின்றான்.

**வாங்கிப் படிக்கத் தவறாதீர்கள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வேதாகமத்தைப் படிப்போம்

அருட்திரு. R. S. லோப்பு அடிகள்.

## (3) அங்கீகரிக்கப்பட்ட திருமறைநூற் பட்டியலின் வரலாறு.

திருமறை நூற் தொகுப்பைப் பற்றிச் சுருக்கமாகக் கூறின்: பழைய புதிய உடன் படிக்கைகளில் இறைவனால் அருளப்பட்ட இறைவெளிப்பாட்டை அல்லது மறை உண்மைகளையும், அறநெறிகளையும் அடக்கியுள்ள பரிசுத்த நூற் தொகுப்பு என்று கூறலாம்.

இவை பரிசுத்த ஆவியின் உதவியால் எழுதப்பட்டவை. இறைவெளிப்பாடு, மனிதருக்கு புத்தக உருவில் இவ்விதம் அளிக்கப்பட்டது. வேதாகமத்தில் அடங்கியுள்ள புத்தகங்கள், பலரால் வெவ்வேறு காலங்களிலும், சூழ்நிலையிலும், தேவையிலும் எழுதப்பட்டிருப்பினும், அதை எழுதியவரும் அதில் எழுதப்பட்ட விடயமும் ஒன்றேஒன்றுதான்.

பழைய உடன்படிக்கைக் காலத்தில், இறைவெளிப்பாடு, மோசேஸ் போன்ற இஸ்ருயேல் இறைபணியாளர் மூலமாகவும், பரிசுத்த ஆவியால் உந்தப்பட்ட ஏனையோர் வாயிலாகவும் மக்களுக்கு வழங்கப்பட்டது. புதிய உடன்படிக்கைக் காலத்தில், இறைவெளிப்பாடு, கிறீஸ்துவின் மூலமாகவும், அப்போஸ்தலர், சீஷர் வாயிலாகவும் மக்களுக்கு அருளப்பட்டது. வேதாகமத்தில், கிறீஸ்துவுக்கு முன் சென்றதெல்லாம், ஒருவிதத்தில் கிறீஸ்துவின் வருகைக்கு ஆயத்தமாகவும், கிறீஸ்துவுக்குப்பின் வந்ததெல்லாம் அவரைப் பற்றிய விளக்கமாகவுமிருக்கின்றது.

கிறீஸ்தவ யுகம் ஆரம்பமாகுமுன், கடவுளால் ஏவப்பட்டு எழுதப்பட்ட பரிசுத்த நூற்தொகுப்பு ஒன்றை யூதர்கள் வைத்திருந்தனர். இவர்களின் விசுவாசத்துக்கும், அறநெறிக்கும், நல்வாழ்க்கைக்கும் இது ஒரு அளவுகோல் போன்று இருந்தது. திருச்சட்டம், (Low) இறைவாக்கு (Prophets) படிப்பினை (Writings) என்று மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

யூதர்கள் பாவித்துவந்த பரிசுத்த திருமறை நூற் பட்டியலின் கருவாக அமைந்திருக்கும் சட்டம் (The Torah Pentateuch–or Law) என்னும் பகுதி, மோசேஸ் என்பவரால் இறைவனிடமிருந்து பெற்றுக்கொண்டதென்று எல்லோரும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர். ஏனைய புத்தகங்கள் இதைக் குறித்தும், இதன் விளைவாகவும், ஏற்பட்டதினால், அவைகளும் படிப்படியாக பரிசுத்த பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

பலஸ்தீன் நாட்டு யூதர்களுக்கும், கிரேக்க மொழி பேசிய யூதர்களுக்குமிடையில் அங்கீகரிக்கப்பட்ட திருமறை நூற் பட்டியலில் சிறிது வித்தியாசமிருந்தது. இதற்கு முக்கிய காரணம்: மேற்கூறிய இரு பகுதியினரும் இறைவெளிப்பாடு (Revelation) இறையூக்கம் (Inspiration) என்பவற்றில் ஒரேவித கருத்தைக் கொண்டிருக்கவில்லை.

மீட்புச் சரிதையை ஒரு குறிக்கப்பட்ட, கடந்த காலத்துக்குள் மாத்திரம் அடக்கியதுடன், இறையூக்கத்தையும், இறைவனின் விசேஷ செயல்களையும் இஸ்ருயேல் மக்களின் சரித்திர சம்பவத்துக்குள் மாத்திரம் வைத்து, இறைவெளிப்பாட்டை மிகவும் குறுகிய கண்ணுடன் பலஸ்தீன் நாட்டு யூதர்கள் நோக்கினர். ஆனால் கிரேக்க மொழி பேசிய யூதர்களோவென்றால்: இறைவெளிப்பாட்டை மிகவும் பரந்த மனப்பான்மையுடன் நோக்கினர். அதாவது இறைவனின் உறுதுணையும், பரிசுத்த ஆவியின் ஆற்றலும், இறைவாக்கினருக்கு முன்பு அளிக்கப்பட்டது போன்று, பரிசுத்தர்களுக்குத் தொடர்ந்து அளிக்கப்படுவதுடன் மனித சரித்திரத்தில் தொடர்ந்து இறைவெளிப்பாடு நடந்து கொண்டிருக்கின்றது (cf ஞானகமம் 7+8)

அலெக்சாந்திரியாவிலும், வேறு இடங்களிலும் சிதறுண்டு வாழ்ந்த கிரேக்க மொழி பேசிய யூதர்களின் திருமறை நூற்பட்டியலையும், அத்துடன் கூடிய தொபியாசு, யூதித்,

[12ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வேதாகமத்தைப்...

[11ம் பக்கத் தொடர்ச்சி]

ஞானகமம், சர்வப்பிரசங்கி (பென்சீராக்) எரேமியாசின் கடிதம், 1ம் 2ம் மக்கபேயர், எஸ்ரா (10,4–16,24) தானியேல் (3, 24–90 13–14) போன்ற ஆகமங்களையும் கிறீஸ்தவர்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

மேற்கூறிய திருமறை நூற் பட்டியலை கிறீஸ்துநாதரும், அவரின் அப்போஸ்தலர்களும் சீஷர்களும், விசேசமாக தன்னையும் ஒரு அப்போஸ்தலனாக அழைக்கும் சின்னப்பரும் ஏற்றுக்கொண்டார்கள். இவர்கள் இப்பட்டியலிலிருந்து மேற்கோள் எடுத்துக் காட்டும் பொழுது ''கடவுளின் வார்த்தை'' என்று இவற்றை அழைப்பதிலிருந்து நாம் இதை விளங்கிக் கொள்ளலாம். (மாற்கு 7, 13: உரோ. 3, 2)

கிறீஸ்துநாதரும் அப்போஸ்தலர்களும், திருமுறை நூற்பட்டியலைப் பற்றி எமக்கு எழுத்தில் எதையும் கூறிப் போகவில்லை. எனவே, அப்போஸ்தொலிக்க வழி வந்த பாரம்பரியத்தில், நாம் மிகவும் தங்கியிருக்கின்றோம். கத்தோலிக்க எழுத்தாளரிடையே திருமறை நூற் பட்டியலைப் பற்றி சிறிது கருத்து வேற்றுமையிருந்த போதிலும், கத்தோலிக்க திருச்சபை பாரம்பரியத்தைத் தழுவி 1546ல் நடைபெற்ற திரிதேந்து பொதுச் சங்கத்திலும், 1870ல் நடைபெற்ற வர்த்திக்கான் பொதுச் சங்கத்திலும், திட்டவட்டமாக வரையறுத்துக் கூறி, இந்தக் கருத்து வேற்றுமைக்கு முற்றுப்புள்ளி வைத்தது. பெரும்பான்மையான கிறீஸ்தவ மக்கள் ஏற்றுக்கொண்ட 38 திருமறைப் புத்தகங்களுடன் மற்றைய 7 புத்தகங்களும் (ஞானகமம், பென்சீராக், 2 மக்கபேயர், யூதித், தொபியாசு, பாரூக்) ஒன்று சேர்த்து எல்லாமாக 45 புத்தகங்கள் உண்டென்று 'பிரகடனம் செய்யப்பட்டது.

பழைய ஏற்பாட்டைப் போன்று, புதிய ஏற்பாட்டின் திருமறை நூல்களும் ஒரே சமயத்தில் அங்கீகரிக்கப்படவில்லை. இவை நாளாவட்டத்தில் சிறிது சிறிதாக ஒன்று சேர்க்கப்பட்டன. கிறீஸ்து போதித்தாரே தவிர, எழுத்தில் ஒன்றும் கொடுக்கவில்லை. அதே போன்று அப்போஸ்தலர்களும் சீஷர்களும் ஆரம்பத்தில் போதித்து வந்தார்களே தவிர, எழுதவில்லை. காலம் செல்லச் செல்ல, சந்தர்ப்பமும் சூழ்நிலையும், தேவையும் எழ, இப்போதனைகள் எழுத்துருவில் இடம் பெற்றன. இப்படியான ஏடுகளை ஒன்று திரட்டி திருச்சபை, திருமறை நூற்தொகுப்பை அமைத்துக் கொடுத்தது.

புதிய ஏற்பாட்டின் திருமறை நூல்களை தொகுப்பதற்கு பாரம்பரியம் நன்கு உதவியுள்ளது. இடத்துக்கு இடம் பாரம்பரியத்தில் சிறிது வித்தியாசமிருந்தபோதிலும், முக்கிய அம்சங்களில் பாரம்பரியம் ஒத்திருந்தது. புதிய ஏற்பாட்டில், திருமுறை நூற்பட்டியலில் 27 புத்தகங்களுண்டு என்று பாரம்பரியத்தை முன்னிட்டு, திரிதேந்து பொதுச் சங்கம் கூறுகின்றது. இவற்றில் 7 நூல்கள் பின் அங்கீகரிக்கப்பட்ட நூல்களாகக் கருதப்படுகின்றன. ★

---

## இறைவன் அளித்த...

[9ம் பக்கத் தொடர்ச்சி]

கொண்ட தாத்தா சாந்தனை அழைத்து, ''மகனே, உன்னுடையவும் சாந்தியுடையவும் திருமண நாளைக் காண நான் கொடுத்து வைக்காதவனாகிவிட்டேன். இவ்வுலகில் எனக்குள்ள குறை இது ஒன்றுதான். சாந்தியுடைய நல்வாழ்வு உன்கையில்தானப்பா இருக்கிறது. அவள் கண் கலங்காதபடி காப்பாற்ற வேண்டியது இனி உன் பொறுப்பு'' என்றும், சாந்தியை அழைத்து ''மகளே பெண்மையென்பது கற்பென்றுதான் பொருள்படும். ஒரு பெண்ணின் கற்புக்கு இந்த உலகமே ஈடாகாதம்மா. அப்படிப்பட்ட மேன்மையான அந்தக் கற்பைக் காப்பாற்ற உன் உயிரைத் தியாகம் செய்யவும் தயங்காதே'' என்று கூறியபடியே அந்த உத்தம தியாகி கண்களை இறுக மூடிக்கொண்டு மீளா நித்திரையில் ஆழ்ந்துவிட்டார். சாந்தனும் சாந்தியும் சிந்திய கண்ணீர் தாத்தாவின் உடலை நீராட்டுவதை பார்த்துக்கொண்டிருக்க குருவானவர் தான் அவ்விடத்திலிருந்தார். அவர்கள் உலகெனும் கடலிலே திக்குத்திசை தெரியாது தத்தளிக்க விடப்பட்டபோது கலங்கரை விளக்கமாய் நின்று கரைசேர வழிகாட்டிய தியாகச்சுடர் அணைந்து விட்டது. இறைவனுடைய சித்தத்தை வெல்லத்தான் இவ்வுலகில் எந்தச் சக்தியாலும் முடியாதே. இருவரும் மீண்டும் உலகில் தனித்து விடப்பட்டார்கள், ஆனல் முன்போல் குழந்தைகளாக அல்ல, நல்ல வாலிபப் பராயத்தை அடைந்தவர்களாக.

[வளரும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாணவர் மன்றம்

## மறைக்கல்விப் போட்டி - 2.

விதிகள்:-

1. க. பொ. த. (சாதாரண) தரத்திற் கற்கும் மாணவர்கள் மாத்திரம் கலந்து கொள்ளலாம்.

2. ஒருவர் ஒரு விடைப்பத்திரம் மாத்திரந்தான் அனுப்பலாம்.

3. விடைப்பத்திரத்துடன் கீழே தரப்பட்டுள்ள 'கூப்பனையும்' நிரப்பிச் சேர்த்தனுப்பவேண்டும்.

4. விடைகள் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.

5. விடைகள் மாணவரின் சொந்தக் கையெழுத்தாயிருக்கவேண்டும்.

6. போட்டி சம்பந்தமாய் பத்திரிகாசிரியருடன் எவ்வித கடிதத் தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாது.

7. விடைகள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் போட்டிக் குழுவினரின் தீர்ப்பே முடிவானதாகும்.

8. பரிசு பெற்றவர்களின் பெயர்கள் 'தொண்டன்' பத்திரிகையில் வெளியிடப்படும்.

1. பின்வரும் விடயங்களுள் ஒன்றைப் பற்றிக் கட்டுரை வரைக. (150 சொற்களுக்கும் 200 சொற்களுக்கும் இடைப்பட்டதாய் இருத்தல் வேண்டும்).

(அ) பரிசுத்த கன்னி மரியம்மாள் நமது அன்னை.

(ஆ) தெய்வீக விருந்தும் தேவனின் அன்பும்.

(இ) கடமையே கடவுளின் பணி.

2. இயேசுநாதரிடம் குற்றம் காணப் பரிசேயர் பயன்படுத்திய ஒரு சந்தர்ப்பம் கூறுக. அச்சந்தர்ப்பத்தில் அவர் தெய்வீக விவேகத்துடன் நடந்துள்ளார் என்பதை விளக்குக.

3. பின்வரும் கூற்றுக்கள் நான்கினுக்குச் சுருக்கமானதும் தெளிவானதுமான விளக்கம் தருக:

(அ) ''அஞ்சாதே இன்று முதல் மனிதர்களைப் பிடிப்பவனுவாய்''

(ஆ) ''மனுமகன் ஓய்வு நாளுக்கும் ஆண்டவர்''

(இ) ''குருடன் குருடனுக்கு வழிகாட்ட முடியுமா?....''

(ஈ) ''....முதலில் உன் கண்ணிலிருந்து விட்டத்தை எடுத்தெறி; பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுக்க நன்ருய்க் கண் தெரியும்''

(உ) ''....உள்ளத்தின் நிறைவினின்றே வாய் பேசும்''

(ஊ) ''பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்''

4. பின்வரும் வசக்கியங்களில் உள்ள இடைவெளிகளைப் பொருத்தமான சொற்களை வைத்து நிரப்புக. (விரும்பிய 10 வாக்கியங்களை மாத்திரம் நிரப்புக)

(அ) ''ஒவ்வொரு ............................ அறிவது அதனதன் ........................''

(ஆ) ''பெண்களிடம் பிறந்தவர்களுள் ..... ............................ மேலானவர்''

(இ) ''என்னைப் பின்செல்ல விரும்புகிறவன் ................. ............... ............... நாள்தோறும் ............... ................... என்னைப் .................... ....................''

(ஈ) ''குருவே நாம் இங்கு ..................... எத்துணை ........................?''

(உ) ''வானத்துப் பறவைகளுக்குக் கூடு உண்டு; ................... ...............இல்லை''

(ஊ) ''ஓநாய்களிடையே ................... உங்களை அனுப்புகின்றேன்''

(எ) ''ஆயினும் ...................... வார்த்தையைக் கேட்டு ..................... அதிலும் ............................பெற்றவர்கள்''

[14ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மாணவர் மன்றம்...

*(13ம் பக்கத் தொடர்ச்சி)*

(ஏ) ''இயேசுவே உன்னத ..................... ...................., என் காரியத்தில் ஏன் ...................? உம்மை .................. என்னை .................... வேண்டாம்''

(ஐ) ''நானும் உம்மோடு...............விடும்''

(ஒ) ''யாரோ என்னைத்.....................வல்லமை .................. .................. நான் உணர்ந்தேன்''

(ஓ) ''அஞ்சாதே.................. அதுபோதும்; அவள் ......................''

(ஔ) ''போதகரே ...................... வாழ்வு பெற.................. ..............வேண்டிய தென்ன''?

5. ஒரு தேவதிரவிய அனுமானத்திற்கு
   1. ......................
   2. ......................
   3. ...................... இவை மூன்றும் தேவை.

6. உண்மைத் திருச்சபையின் அறிகுறிகள்:
   1. ..........................
   2. ..........................
   3. .................. ..........
   4. ........................... ஆகிய நான்காகும்.

---

விடைப்பத்திரத்துடன் இணைத்து அனுப்பும் பகுதி.

**மறைக்கல்விப் போட்டி – 2**

**(விடை அனுப்பவேண்டிய கடைசித் திகதி 1-6-72)**

மாணவன்/மாணவி பெயர்:..................

.....................................................................

பாடசாலையின் பெயரும் முகவரியும்:........

.....................................................................

.....................................................................

.............................................................
மாணவன்/மாணவியின் கையொப்பம்

.............................................................
தலைமை ஆசிரியர்/தலைவர் கையொப்பம்

---

விடைப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி:-

**அருள் திரு. றெக்ஸ் செபமாலை அடிகள்**
ஆயர் இல்லம், மட்டக்களப்பு.

# கிறிஸ்தவ போதக வழிகாட்டி

34ம் பாடம்: **பிறர் அன்பு**

இப்பாடம் **க. தி. வி. 68**ம் பாடமாகும்.

**சிந்தித்துப்பார்: விடைகள்:**

1. நமது அயலவரை நேசித்து அவர்களுக்கு நன்மை செய்து அவர்களுடைய ஆன்ம சரீர தேவைகளில் அவர்களுக்கு நம்மால் இயன்ற அளவில் உதவிசெய்தல் மூலம் நாம் பிறர்அன்பு உள்ளவர்களென்று காட்டலாம்.

2. ''என்னுடைய மிகவும் சிறிய சகோதரர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் உதவி செய்த பொழுதெல்லாம் எனக்கே அதைச் செய்தீர்கள்''

3. நாம் கடவுளின் பிள்ளைகள், கிறிஸ்து நாதரின் சீடர்கள் ஆனதால் நமக்கு செய்யப்பட்ட தீங்குகளை நாம் மன்னிக்க வேண்டும். (மத்தேயு 5: 44–45)

4. நாம் மற்றவர்களுக்கு கெடுதி புரிந்தால் அவர்களிடம் மன்னிப்புக்கேட்டு அவர்களுக்கு விளைவித்த தீமைக்கு ஈடுசெய்ய வேண்டும்.

5. எல்லா கத்தோலிக்கரும் கடவுளின் குடும்பத்தில் நம் சகோதரர்களும் சகோதரிகளுமாய் இருக்கிறார்கள். ஆகையால் அவர்களைச் சிறந்த முறையில் நேசிக்கவேண்டும். நமது அன்பிற்கு சிறப்பான உரிமையுள்ளவர்களாகிய நமது பெற்றோர், சகோதர சகோதரிகள், உறவினர், நண்பர், உபகாரிகள் நம் நாட்டு உடன் குடிமக்கள் ஆகியவர்களையும் நேசிக்கவேண்டும்.

6. பிறர் அன்புக்கு மாறான பாவங்கள்: நம் அயலார்மேல் குறைந்த அன்பு, பிறருக்கு கெடுதிபுரிதல், பொறாமை, வர்மம், வெறுப்பு, பழிவாங்குதல் என்பனவாகும்.

7. **பொறாமை:**– பிறரின் உடல்நலம், திறமை, சொத்து, மதிப்பு, நல்ல நிலையைப் பார்த்து எரிச்சல் கொள்ளல்.
**வர்மம்:**– பிறருக்கு வந்த கேட்டைக் கண்டு மகிழ்தல்.

**பழிவாங்குதல்:**– ஒருவன் எனக்குத் தீங்கு செய்தால் அதை மனதில் வைத்து தருணம் கிடைக்கும்போது அதை அவனுக்கே திருப்பிச்செய்தல்.

[15ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மாணவர் மன்றம்...

[14ம் பக்கத் தொடர்ச்சி]

**பயிற்சிகள் :-** 'ஆ' பகுதியிலுள்ளவைகளை 'அ' பகுதியிலுள்ளவைகளோடு இணைத்து சரியான வசனங்கள் அமைக்கவும்.

| அ | ஆ |
|---|---|
| 1. நம் அன்பிலிருந்து | 1. ஏனெனில் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள். |
| 2. பிதாவே இவர்களை மன்னித்தருளும் | 2. அன்பு செய்கிறார். |
| 3. தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் | 3. அதையெல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். |
| 4. கடவுள் எல்லா மனிதர்களையும் | 4. கொலைப்பாதகன். |
| 5. மனிதர் உங்களுக்கு எதைச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களோ | 5. எவரையும் நீக்கக்கூடாது. |

## இறைவழிபாட்டுச்...

[2ம் பக்கத் தொடர்ச்சி]

சமூகம் பங்கெடுப்பதுபோல், உறுதிப்பூசுதல் திருச்சடங்கிலும் கிறிஸ்தவ சமூகம் அறிவோடும் பத்தியோடும் செயல் முறையில் பங்கு கொள்ள வேண்டுமென்று திருச்சபை விரும்புகின்றது. ''திருச்சடங்குகள் குறித்துக்காட்டும் புனித காரியங்களைக் கிறிஸ்தவ மக்கள் தங்களால் இயன்ற அளவில், எளிதாய்ப் புரிந்துகொண்டு, முழுமையாகவும், செயல் முறையிலும், சமூகத்திற்குரிய விதத்திலும் அவற்றில் பங்குகொள்ள இயலவேண்டும்'' என்று 2ம் வத்திக்கான் பொதுச்சங்கம் கூறியுள்ளது (இறைபணி இ. 21). இந்நோக்கம் நிறைவேறும்படி உறுதிப்பூசுதல் திருச்சடங்கு முறை இப்போது சீரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. இச்சீரமைப்பின்படி உறுதிப்பூசுதல் திருவருட்சாதனம் பலருக்கு ஒரே தருணத்தில், சாதாரணமாய்த் திவ்விய பூசைப்பலியின் போது அளிக்கப்பட வேண்டுமென்று திருச்சபை கற்பித்துள்ளது. இவ்வாறு, உறுதிப்பூசுதல் பெறுவோரின் பெற்றோரும், ஞானப்பெற்றோரும், உற்றார் உறவினர்களும், அவ்விடத்தில் வதியும் கிறிஸ்தவ சமூகத்தின் உறுப்பினரும் இத் திருச்சடங்கில் அறிவோடும், பத்தியோடும், செயல்முறையிலும் பங்கு கொள்ள வசதி அளிக்கப்படுகின்றது.

ஞானஸ்நானம் பெற்றவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்று, கிறிஸ்தவர்களுக்குரிய பூரண நிலையை அடைதல் கிறிஸ்தவ சமூகத்திற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சியாதலால், உறுதிப்பூசுதல் அளிக்கும் விழாவைப் பெரிய திருவிழாவாகக் கணித்து, ஆடம்பரமாகக் கொண்டாடுதல் மிகவும் பொருத்தமாகும். இ


## பாலையூற்றுத் திருவிழா

திருமலையில் ஓர் திருக்குன்றம். அத் திருக்குன்றத்தில் ஓர் திருக்கெபி. அத் திருக்கெபியில் காட்சி தருகின்றாள்

**அன்னை அமல மரி**

அவ்வன்னையின் திருப்பதிதான்
பக்தர்கள் பல்லாண்டு போற்றிப் புகழும்

பாலையூற்றுப்பதி

கேள்விப்பட்டீர்களா?
பார்த்து விட்டீர்களா?

இதோ உங்களை அன்புடன்
அழைக்கின்றாள் அன்னை லூர்து மரி

**திருநாள் ஜுன் 4ந் திகதி**

திருமலையிலிருந்து விசேட பஸ் சேவைகள் உண்டு. தங்குமிடம்? சாப்பாடு?

விபரங்களுக்கு எழுதுங்கள்:

பங்குத்தந்தை
பாலையூற்று — திருகோணமலை.
என்ற முகவரிக்கு,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அப்போஸ்தலரான...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

கம் தொடர்பு கொண்டனர். மயிலாப்பூரைத் தரிசித்த சீரியன் கிறிஸ்தவர்களும் அராபியர்களும் புனித தோமையாரின் கல்லறையின்மேல் கட்டப்பட்டிருந்த கோயிலை **''பேத்துமா''** அதாவது **''தோமையாரின் வீடு''** என்று அழைத்தனர்.

வெனிஸ் பட்டினத்தின் புகழ்பெற்ற யாத்திரிகராகிய **மார்க்கோபோலோ** கி. பி. 1292ம் ஆண்டளவில் மயிலாப்பூரைத் தரிசித்தபின் புனித தோமையாரின் கல்லறையைப் பற்றி பின்வருமாறு எழுதியுள்ளார்: ''அப்போஸ்தலரான புனித தோமையாரின் உடல் மலபார் நிலப்பகுதியில் அதிகம் மக்கள் தொகை இல்லாத ஒரு சிறிய நகரத்தில் வைக்கப்பட்டுள்ளது. கிறிஸ்தவர்களும் சரசனியரும் (மகமதியர்) திருயாத்திரையாக வந்து இவ்விடத்தை அடிக்கடி தரிசிக்கின்றனர். சரசனியர் இப்புனிதரை மிக வணக்கத்துடன் போற்றி, இவர் ஒரு சரசனியர் ஆகவும், பெரும் தீர்க்கதரிசியாகவும் இருந்தார் என்றும் கூறுகின்றனர். புனித மனிதன் எனப் பொருள்படும் **'அவரியான்'** என்ற பட்டத்தையும் அவருக்கு அளித்துள்ளனர்.

13ம், 14ம் நூற்றாண்டுகளில் சீன தேசத்திற்குத் திருமறை போதிக்கச் சென்ற மெந்தே கோர்வீனோ அருளப்பர், ஓடரிக், ஜோன் தே மரிஞ்ஞொல்லி என்போர் செல்லும் வழியில் மயிலாப்பூரில் தங்கி அப்போஸ்தலரின் கல்லறையைத் தரிசித்துவிட்டுத்தான் பயணத்தைத் தொடர்ந்தனர். 15ம் நூற்றாண்டின் முற்பகுதியில் நிக்கோலோ தே கொந்தி என்னும் இத்தாலிய வியாபாரி இத் திருத்தலத்தைத் தரிசித்தது பற்றி பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது: ''தொடர்ந்து செல்லுகையில் நிக்கோலோ மலேப்பூர் என்ற கடற்கரை நகருக்கு வந்து சேர்ந்தார். இங்குதான் புனித தோமையாரின் திருவுடல் வணக்கத்துடன் எழில்மிக்க பெரியதோர் ஆலயத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது''.

16ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நெஸ்தோரியன் (சீரியன்) திருச்சபையின் தலைவருக்கு மலபார் கடற்கரையிலிருந்து நான்கு நெஸ்தோரிய ஆயர்கள் எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளனர்: ''அப்போஸ்தலரான புனித தோமையாரின் வீட்டில் கிறிஸ்தவர்கள் சிலர் தங்கியிருந்து அதனைப் பழுது பார்க்கின்றனர்... இது மெலியாப்போர் என்ற கடற்கரை நகரில் இந்தியாவின் மாநிலங்களில் ஒன்றான சிலான் மாநிலத்தில் உள்ளது. ''புனித தோமையாரின் வீடு'' என்பது அவரது கல்லறையின் மேல் கட்டப்பட்டிருந்த கோயிலைக் குறிக்கின்றது என்பதில் ஐயமில்லை.

போர்த்துக்கேயர் இந்தியாவுக்கு வந்தபின் புனித தோமையாரின் கல்லறை மிகவும் பிரசித்தி பெற்று விளங்கத் தொடங்கியது. மயிலாப்பூரில் கிறிஸ்தவர்களின் தொகை அதிகரித்ததால் பரிசுத்த தந்தை 5வது சின்னப்பர் 1606ல் புனித தோமையாரின் ஆலயத்தை ஆசனக் கோயிலாகக் கொண்ட மயிலாப்பூர் மேற்றிராசனத்தை ஏற்படுத்தினர். இன்று நாம் அங்கு காணும் அழகுமிக்க பேராலயம் 1896ல் கட்டி எழுப்பப்பட்டது. அதன் நடுவில்தான் புனித தோமையாரின் கல்லறை அமைந்துள்ளது. 1956ம் ஆண்டில் பாப்பரசர் 12ம் பத்திநாதர் அப்போஸ்தலரின் இப்பேராலயத்திற்கு 'பசிலிக்கா' (அரச ஆலயம்) என்ற மகிமைப்பட்டம் வழங்கி அதன் மதிப்பை உயர்த்தினர்.

(வளரும்)

## இங்கினியாகலையில்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

னையின் மாசற்ற இருதயத்துக்கு ஒப்புக் கொடுக்கப்படும்.

இக்கொண்டாட்டத்திற்கு இலங்கையிலுள்ள பரிசுத்த பாப்பரசரின் பிரதிநிதியாகிய பேரருள்திரு கார்லோ கூறிஸ் ஆண்டகை அவர்கள் தலைமை தாங்குவார்கள்.

எனவே, வைகாசித் திங்கள் 13ம் திகதி இலங்கையின் ஏனைய பாகங்களில் இருந்து வரும் யாத்திரிகர்களுடன் சேர்ந்து இவ்விழாவிலே பங்கு பெறும் படியும், குடும்பங்களாகவோ கூட்டங்களாகவோ, பங்குகளாகவோ, பாத்திமா அன்னையின் சேத்திரத்துக்கு யாத்திரை செல்லுமாறும் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

✠ வ. தியோகுபிள்ளை
துணை ஆயர்

இப்பிரசுரம் மட்டக்களப்பு 18, மத்திய வீதியிலுள்ள கத்தோலிக்க அச்சகத்தில், மனேஜர் யோசேப் B. மறே S. S. J. அவர்களால் அச்சிடப்பட்டு, மகா வந். தியோகுப்பிள்ளை, துணை ஆயர், மட்டக்களப்பு. அவர்களால் 1-5-72ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media